தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்


S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Scan this QR Code & Install Our App For
★ Daily Rate ★ Chit Payments ★ Catalogue ★ Estimate ★ Orders



Support us on
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 208 21.1.2026 WEDNESDAY THAI : 7 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 208 21.1.2026 புதன்கிழமை தை : 7 விலை : ரூ.5/–

## தமிழக வளர்ச்சிக்கு

# "தடையாக மத்திய அரசு"

## ஆளுநர் உரை கூறுவது என்ன?

சென்னை: ஜன.21-

'தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு நிபந்தனைகளை விதித்து, அவற்றை செயல்படுத்த தடை விதிக்கிறது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது' என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தனது உரையை வாசிக்காமல் புறக்கணித்துச் சென்றதன் காரணமாக, அந்த உரையை சபாநாயகர் அப்பாவு வாசித்தார். தமிழக ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள அம்சங்கள்:

› மத்திய அரசு எதிர்மறை மனப்பான்மையுடன் மாநில அரசை அணுகுவதால், மாநில அரசு திட்டங்களுக்கான அனுமதி, நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வருவது கவலைக்குரியது. தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு நிபந்தனைகளை விதித்து, அவற்றை செயல்படுத்த தடை விதிக்கிறது. மேலும், அந்த திட்டங்கள் முற்றிலும் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது.

› மிக்ஜாம், ஃபெஞ்சல் புயல்கள் போன்ற இயற்கை பேரிடர்களால் தமிழகம் பெரும் சேதத்தை சந்தித்தபோது, சொற்பமான தொகையை மட்டுமே மத்திய அரசு விடுவித்தது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்துக்கு ரூ.3,548 கோடியை மத்திய அரசு விடுவிக்காததால், அந்த திட்டங்களுக்குரிய முழு செலவையும் மாநில அரசே ஏற்றுள்ளது.

› ஜிஎஸ்டி விகிதங்களின் சீரமைப்பு காரணமாக மாநிலங்கள் பெரும் வருவாய் இழப்பை சந்தித்து வரும் நேரத்தில், மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கக் கூடிய வரி வருவாயை மடைமாற்றும் வகையில், மத்திய அரசு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை விதிப்பதை தவிர்க்க வேண்டும்.

› மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி



திட்டத்தின் அடிப்படை நோக்கத்தை சிதைக்கும் வகையில் மத்திய அரசு அண்மையில் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. மாநில அரசின் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த இயலாமல், நெருக்கடி தரும் காழ்ப்புணர்ச்சியின் அங்கமாகவே புதிய திட்டத்தை கருத வேண்டியுள்ளது. எனவே, புதிய திட்டத்தை திரும்பப் பெற்று, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கு கூடுதல் நிதி ஆதாரங்களை ஒதுக்கி, அதை வெற்றிகரமாக செயல்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

› சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும். கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்திருப்பதன் மூலம், மெட்ரோ ரயில் திட்டத்திலும் தமிழகத்தை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகும் நிலையே காணப்படுகிறது.

› உயர்கல்வி நிறுவனங்களில் 3ம் மூன்றாம் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்று யுஜிசி சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. மறைமுக இந்தி மொழி திணிப்பாக இதைக் கருத வேண்டியுள்ளது. எனவே, அந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்தக் கூடாது. தமிழின் பெருமையை உலகறியச் செய்யவும், தமிழகத்தின் உரிமைகளைப் போராடிப் பாதுகாக்கவும் ஓயாது உழைக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

› இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும்.

'முதன்மை மாநிலமாக தமிழகம்'

› தமிழகம் கடந்த நிதியாண்டில் 11.9 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை எட்டி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும். பொங்கல் திருநாளையொட்டி 2.23 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.3,000 ரொக்கம் உள்ளிட்ட ரூ.6,936 கோடி மதிப்பிலான பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

› தடுப்பூசி செலுத்துதல், ஆக்சிஜன் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகளை உறுதி செய்தல் போன்ற போர்க்கால நடவடிக்கைகளால், தமிழகம் கரோனா பிடியிலிருந்து வெற்றிகரமாக மீட்கப்பட்டது. இந்தச் சாதனை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். 'மகளிர் விடியல் பயணம்' மூலம் பெண்கள் மாதம் ரூ.888 வரை சேமிக்கின்றனர். சுமார் 1.30 கோடி பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்க இதுவரை ரூ.33,464 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

› உயர் கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நகரங்களுக்கு வரும் பெண்கள் நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில் பாதுகாப்பான தங்கும் வசதியைப் பெற 19 தோழி விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களை அதிகமாகக் கொண்ட (40.3 சதவீதம்) மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

› கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள 4.9 லட்சம் ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.34 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டு, பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் வருகையை உறுதி செய்யும் வகையில், 19.34 லட்சம் குழந்தைகள் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

› அயோத்திதாசப் பண்டிதர் மற்றும் தொல்குடி திட்டங்களின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தலா ரூ.1000 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. அம்பேத்கர் அயலக கல்வித் திட்ட நிதி ரூ.36 லட்சமாக உயர்த்தப்பட்டு, 385 மாணவர்கள் வெளிநாடுகளில் பயின்று வருகின்றனர். `காலனி' என்ற சொல் ஆவணங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. நன்னிலம் மகளிர் நிலவுடைமை திட்டத்தின் மூலம் 1,026 ஆதிதிராவிடப் பெண்களுக்கு ரூ.50 கோடி மானியம் அளிக்கப்பட்டு, அவர்கள் நில உடைமையாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

› 27.55 லட்சம் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள் வீடுகளுக்கே சென்று வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த இதுவரை 3 லட்சம் இலவச வீட்டுமனை இணையவழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு இயக்கம் மற்றும் இளைஞர்களுக்கான அறவுணர்வுப் பயிலரங்கங்கள் மூலம் தமிழகத்தின் எதிர்காலம் உறுதி செய்யப்படுகிறது என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தேசத்திற்கு குஜராத் அளித்த பங்களிப்பு; மூன்று ஆளுமைகளை பாராட்டிய சிபிஆர்

புதுடில்லி: ஜன.21-

தேசத்திற்கு குஜராத் அளித்த பங்களிப்பு பாராட்டுக்குரியது. இந்தியாவிற்கு வழங்கிய மூன்று உயர்ந்த ஆளுமைகளுக்கு நன்றி என துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

டில்லியில் உள்ள காந்தி ஆசிரமத்தில் உள்ள ஹரிஜன சேவக் சங்கத்திற்கு துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் விஜயம் செய்தார். அவர் 'மஹாத்மா காந்தியின் பார்வை' என்ற தலைப்பில் புத்தகத்தை வெளியிட்டார். பின்னர் நிகழ்ச்சியில் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: நூலகங்கள் சமூக மாற்றத்திற்கான கருவிகள். அறிவு குணம், மனசாட்சி மற்றும் சமூகப் பொறுப்பை வடிவமைக்கிறது. சமூகத்திற்கு ஹரிஜன சேவக் சங்கம் சிறப்பான சேவையை வழங்கி இருக்கிறது. மேற்கத்திய உடைகளை காந்தி கைவிட்டார்.

இந்த மாற்றம், மக்களுடன் அடையாளம் கண்டு அவர்களின் மேம்பாட்டிற்காக பாடுபடுவதில் காந்திஜியின் வாழ்நாள் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. இந்தியாவின் பருத்தி மான்செஸ்டரில் பதப்படுத்தப்பட்டு இந்தியர்களுக்குத் திரும்ப விற்கப்படுவதை எதிர்த்தார். அதற்குப் பதிலாக அவர் சுதேசியை ஆதரித்தார். இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். நாராயணனின்கல்வியை ஆதரிப்பதிலும் அவரது பயணத்தை வடிவமைப்பதிலும் ஹரிஜன சேவக் சங்கம் முக்கிய பங்கு வகித்தது.

எதிர்காலத்தில் இதுபோன்ற பல முன்மாதிரியான நபர்களை சங்கம் தொடர்ந்து வளர்க்கும். சமூகத்திற்கு நேர்மையான சேவை செய்வது, பண்பும் மனசாட்சியும் கொண்ட நபர்களை உருவாக்குகிறது. தேசத்திற்கு குஜராத் அளித்த பங்களிப்பு பாராட்டுக்குரியது. நாட்டின் சுதந்திரத்திற்காக மகாத்மா காந்தி, தேசிய ஒற்றுமைக்காக சர்தார் வல்லபாய் படேல் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடி என மூன்று ஆளுமைகளை குஜராத் மாநிலம் இந்த நாட்டிற்கு வழங்கியுள்ளது. இவ்வாறு சி.பி.ராதாகிருஷ்ணன் பேசினார்.

## ஆபாச வீடியோவில் சிக்கிய டிஜிபி ராமச்சந்திர ராவ் சஸ்பெண்ட்

பெங்களூரு: ஜன.21-

பணியின் போது பெண்களுடன் நெருக்கமாக இருந்த வீடியோ வெளியான நிலையில், கர்நாடக போலீஸ் டி.ஜி.பி. அந்தஸ்தில் உள்ள ராமச்சந்திர ராவ் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளார்.

கர்நாடக போலீஸ்துறையில் டிஜிபி அந்தஸ்தில் இருக்கும் உயரதிகாரி ராமச்சந்திர ராவ். இவர் பணியின் போது பல பெண்களுடன் அலுவலக அறையில் மிக நெருக்கமாக இருந்த வீடியோக்கள் அண்மையில் வெளியானது. சமூக வலைதளங்களில் வெளியான இந்த வீடியோக்கள் பெரும் சர்ச்சையாக மாறியது.

வீடியோவை வெளியிட்டது யார் என்பது பற்றிய விவரங்கள் தெரியாத நிலையில், கர்நாடகா அரசு ராமச்சந்திர ராவை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்த உத்தரவில் கூறப்பட்டு உள்ளதாவது; ஒரு அரசு ஊழியருக்கு பொருந்தாத வகையில் ராமச்சந்திர ராவ் செயல்பட்டு உள்ளார். அரசிற்கு அவர் அவமானத்தையும் ஏற்படுத்தி உள்ளார். எனவே, அவரை முதல்கட்டமாக பணியில் இருந்து இடைநீக்கம் செய்வது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குள் சிக்கி இருக்கும் டிஜிபி ராமச்சந்திர ராவின் வளர்ப்பு மகள் ரன்யா ராவ். இவர், துபாயில் இருந்து சட்டவிரோதமாக தங்கம் கடத்திய வழக்கில் அதிகாரிகளால் பெங்களூரு விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டவர். தங்கம் கடத்தலுக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், ராமச்சந்திர ராவ் கட்டாய விடுப்பில் அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர், நீண்ட நாட்கள் கழித்து குடிமை உரிமைகள் அமலாக்க பிரிவு டி.ஜி.பி,யாக நியமிக்கப்பட்டார்.






## கன்னிவாடியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்த நாளை முன்னிட்டு பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம்

சின்னாளபட்டி, ஜன.21

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியம், கன்னிவாடி பேரூர் கழக மாணவரணி சார்பாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பழனி செல்லும் பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கன்னிவாடி பேரூர் கழக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம் தலைமை தாங்கினார். பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், பேரூர் அவைத் தலைவர் சர்புதீன், மாவட்ட பிரதிநிதி பெருமாள்,பேரூர் துணை செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூர் மாணவரணி அமைப்பாளர் சுருளி நாதன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் அன்னதானத்தை துவக்கி வைத்து பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.



நிகழ்ச்சியில் கன்னிவாடி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி சண்முகம், மாவட்ட பிரதிநிதி பெருமாள், பேரூர் மாணவரணி துணை அமைப்பாளர்கள் பாலாஜீ, திவாகரன், கார்த்திகை செல்வி, இளைஞரணி அமைப்பாளர் பிரபு, 1 வது வார்டு செயலாளர் தண்டபாணி,14 வது வார்டு செயலாளர் காளியப்பன், சுவுசு. கேசவன், கழக பேச்சாளர் ஜீவானந்தம், சிவராஜா, தகவல் தொழில்நுட்ப துணை அமைப்பாளர்கள் சரண்யா ராஜவேல் மற்றும் யோகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒரே நாளில் பவுனுக்கு ரூ.3,600 உயர்வு தங்கம் விலை ரூ.1.11 லட்சத்துடன் புதிய உச்சம்!

சென்னை: ஜன.21-
ஆபரணத் தங்கம் விலை (ஜன.20) ஒரே நாளில் பவுனுக்கு ரூ.3,600 உயர்ந்து, வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதாவது, ஒரு பவுன் தங்கம் ரூ.1,11,200க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் இன்று காலை 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.160 என உயர்ந்து, ரூ.13,610க்கு விற்பனை செய்யப்பட்டது. பவுனுக்கு ரூ.1,280 உயர்ந்து, ரூ.1,08,880க்கு விற்பனை செய்யப்பட்டது. 24 காரட் சுத்த தங்கம் பவுன் ரூ.1,18,776க்கும் விற்பனையானது.

இந்நிலையில், தங்கம் விலை மாலையில் மீண்டும் ரூ.2,320 அதிகரித்து ஒரே நாளில் பவுனுக்கு ரூ.3,600 உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.290 உயர்ந்து ரூ.13,900க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, பவுனுக்கு ரூ.2,320 உயர்ந்து ரூ.1,11,200க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வரலாறு காணாத விலையேற்றத்தில் வெள்ளி விலையும் உள்ளது. அதாவது, வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 கூடி ரூ.340க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ வெள்ளி ரூ.3,40,000 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலை உயர்வு குறித்து, சென்னை தங்கம் மற்றும் வைர வியாபாரிகள் சங்க நிர்வாகி ஒருவர் கூறும்போது, "உலக அளவில் பொருளாதார நிலையற்ற தன்மை, கிரீன்லாந்து பிரச்சினை, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் தங்கத்தில் மீது அதிக முதலீடு செய்வது போன்ற காரணங்களால், தங்கத்தின் தேவை உயர்ந்து, விலை உயர்ந்துள்ளது. இது போலவே வெள்ளியும் தொழில்துறை பயன்பாட்டுக்கு அதிகளவில் வாங்கப்படுவதால், விலை உயர்கிறது" என்றார்.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 90.97 ஆக வீழ்ச்சி கண்டுள்ளதும் தங்கம் விலை சரிவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பங்குச் சந்தையில் வீழ்ச்சி: இதனிடையே, மும்பை பங்குச் சந்தையில் இன்று சென்செக்ஸ் 1,065.71 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 82,180.47 ஆகவும், தேசிய பங்குச் சந்தையில் நிஃப்டி 353.00 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 25,232.50 ஆகவும் நிலை கொண்டிருந்தது.

# யூடியூப் பார்த்து உடல் எடையை குறைக்க மருந்து சாப்பிட்ட மதுரை மாணவி உயிரிழப்பு



மதுரை ,ஜன.21-
உடல் எடையை குறைக்க, யூடியூப் பார்த்து நாட்டு மருந்து சாப்பிட்ட மதுரை கல்லூரி மாணவி உயிரிழந்தார்.

மதுரை செல்லூர் மீனாம்பாள்புரத்தைச் சேர்ந்த வேல்முருகன் மகள் கலையரசி (19). இவர், மதுரையிலுள்ள அரசு உதவி பெறும் மகளிர் கல்லூரி ஒன்றில் இளங்கலை 2ம் ஆண்டு படித்தார். உடல் எடையை குறைப்பது குறித்த வீடியோக்களை யூடியூப்பில் பார்த்து வந்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்ட குறிப்புகளின்படி கீழமாசி வீதியிலுள்ள நாட்டு மருந்து கடை ஒன்றில் கடந்த 17ம் தேதி மருந்து பொருட்களை வாங்கி வந்து சாப்பிட்டுள்ளார்.

சிறிது நேரில் அவருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. அவரை நெல்பேட்டை பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையில் பெற்றோர் சேர்த்தனர். சிகிச்சைக்கு பிறகு வீடு திரும்பிய அவருக்கு ஜன.18 ம் தேதி மீண்டும் வாந்தி, மயக்கம் வந்தது. மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். இது குறித்த புகாரின்பேரில் செல்லூர் போலீஸார் வழக்குப் பதிவு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# உள்ளாட்சி அமைப்பில் மாற்றுத்திறனாளிகள் இடம்பெற சட்டத் திருத்தம்



சென்னை, ஜன.21-
சட்டப் பேரவையில் ஆளுநர் உரையின் போது தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கூறியதாவது: மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளின் குறைகளை தொடக்க நிலையில் கண்டறிந்து உரிய சிகிச்சை மற்றும் திறன் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க கடனுதவி வழங்கப்படுகிறது.

முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் , அறிவுசார் குறைபாடு உடையவர்கள் மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்காக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகள் நியமன முறையில் உறுப்பினராக்க இந்த அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் 3631 மாற்றுத் திறனாளிகள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாகியுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகையை இந்த அரசு ரூ.1000ல் இருந்து ரூ.1500 ஆக அதிகரித்துள்ளது. இதன் மூலம் 5.88 லட்சம் மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளின் மாதாந்திர பராமரிப்பு தொகை தற்போது ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 2.58 லட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர்

# மழையால் சேதமான சாலைகளை சீரமைக்க ரூ.1,000 கோடி ஒதுக்கீடு: தமிழ்நாடு அரசு




சென்னை, ஜன.21-
மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மழையால் சேதமான சாலைகளை சீரமைக்க ரூ.1,000 கோடி தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழை மற்றும் அதனை தொடர்ந்து நவம்பர், டிசம்பர் மாதங்களில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் மாநில முழுவதும் பரவலான பாதிப்புகள் ஏற்பட்டன. குறிப்பாக சாலைகள் பெருமளவில் சேதம் அடைந்தன. தற்காலிக நடவடிக்கையாக உள்ளாட்சி நிர்வாகங்கள் கல். மண், ஜல்லிகளை கொட்டி சாலைகளை சீரமைத்தன. ஆனால் தற்காலிக சீரமைப்புகள் நீடித்த பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லை. இதனால் மழையால் சேதம் அடைந்த சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் முழுமையாக சீரமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

அதன்படி மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து உள்ளாட்சிகளிடம் இருந்தும் விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன. இந்த அறிக்கைகளின் அடிப்படியில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மழையால் சேதமான சாலைகளை சீரமைக்க ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து மாநிலத்தில் உள்ள 24 மாநகராட்சிகள் மற்றும் 145 நகராட்சிகளுக்கு மொத்தம் ரூ.700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு ரூ.100 கோடியும், 479 பேரூராட்சிகளுக்கு ரூ.200 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் தேர்வு செய்யப்பட்ட அனைத்து சாலைகளையும் முழுமையாக சீரமைக்கும் பணிகளை உடனடியாக தொடங்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

# "மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என்.ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்குக" மு.வீரபாண்டியன்





சென்னை, ஜன.21-
"அமைதியும், நல்லிணக்க சூழலும் நிலவி வரும் தமிழ்நாட்டில் மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என். ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்க வேண்டும் என குடியரசுத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆர்எஸ்எஸ் வழிநடத்தும் பாஜக ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற, ஆரம்ப நாளில் இருந்து மாற்று அரசியல் கருத்துடைய மாநில அரசுக்கு எதிரான தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது. குறிப்பாக ஆளுநர் மாளிகை வழியாக மாநில அரசுகளின் ஜனநாயகபூர்வ செயல்பாட்டிற்கு பல்வேறு இடையூறுகளை செய்து, மக்கள் நலனுக்கும், மாநில முன்னேற்றத்துக்கும் தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இதற்காகவே குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஆளுநர் பொறுப்பில் இருந்து வரும் ஆர்.என். ரவி, ஆரம்ப நாளில் இருந்தே அரசியலமைப்பு அதிகாரத்தை அத்துமீறி, தன்னிச்சையாக மாநில அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். ஆர்.என்.ரவி, அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட ஆளுநர் பொறுப்புக்கு எள்ளளவும் தகுதியற்றவர் என்பதை ஆதாரப்பூர்வமான சான்றுகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து குடியரசுத் தலைவரிடம் புகார் அளித்தும், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் ஊக்கம் பெற்ற ஆர்.என்.ரவி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒரு மனதாக நிறைவேற்றிய சட்ட மசோதக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், கிடப்பில் போட்டு, இழுத்தடித்து, இறுதியில் அவைகள் செத்துப் போனதாக அவமதித்து வந்தார். தமிழ்நாடு அரசு முன்னெடுத்த சட்டப் போராட்டத்தின் மூலம் உச்ச நீதிமன்றம் ஆளுநர் அத்துமீறலை கடுமையாக விமர்சித்து, மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி முறையில் சட்டமன்றப் பேரவையின் அதிகாரத்துக்கும், மாநில அரசுக்கும் மேலான அதிகாரம் பெற்றவர் அல்ல ஆளுநர் என்பதை உறுதியாக தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில் காலையில் கூடிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உரையாற்றி, கூட்டத் தொடரை தொடங்கி வைக்க வேண்டிய ஆளுநர் ஆர்.என்.ரவி, சட்டமன்றப் பேரவை வழிவழியாக பல பத்தாண்டுகளாக பின்பற்றி வரும் நல்மரபை உடைத்து சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பேரவைத் தலைவர், அவையின் மரபை எடுத்துக் கூறி, அவை மதிக்கப்பட வேண்டும் என விடுத்த வேண்டுகோளை நிராகரித்து, வழக்கம் போல வேகமாக வெளியேறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகை, எதிர் கட்சியினரும் சொல்ல முடியாத, அடிப்படையும், ஆதாரமும் இல்லாத அரசியல் அவதூறுகளை அறிக்கையாக தொகுத்து வெளியிட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முழுமையாக நிராகரிக்கிறது. வன்மம் கொண்ட அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்களின் நலனை பேணுவதில் நாட்டிலுள்ள முதல் 5 மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு பின் தங்கியிருப்பதாக ஆளுநர் கூறுவது குருட்டுத்தனமானது.

இருபதாண்டுகளாக செயல்பட்டு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை நீக்கியதன் மூலம் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள சுமார் 2 கோடி தொழிலாளர்களின் சட்டபூர்வ வேலை பெறும் உரிமையை பறித்து விட்டு, மதவாத சக்திகளுக்கு உதவும் விபி ஜி ராம்ஜி திட்டத்தை அறிவித்துள்ள ஒன்றிய அரசை காப்பாற்றும் முயற்சியில் தரம் தாழ்ந்த, மலிவான அரசியலில் ஈடுபடும் ஆர்.என்.ரவி, ஒரு வினாடியும் ஆளுநர் மாளிகையில் இருக்க தகுதியற்றவர்.

அவரது வன்ம அரசியலை களத்தில் தமிழக மக்கள் முற்றாக முறியடிப்பார்கள். அமைதியும், நல்லிணக்க சூழலும் நிலவி வரும் தமிழ்நாட்டில் மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என்.ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்க வேண்டும் என குடியரசுத் தலைவரை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன், தமிழ்நாட்டின் தனித்துவம் வாய்ந்த பண்புகளையும், மரபுகளையும் பாதுகாக்க, ஜனநாயக நெறிகளையும், சட்டத்தின் ஆட்சி முறையினையும் பாதுகாக்க ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து செயல்பட முன் வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கிரீன்லாந்தை வாங்க டிரம்ப் கடும் மிரட்டல்; விண்வெளி தளத்தில் விமானத்தை இறக்கிய அமெரிக்கா: சர்வதேச அரசியலில் பெரும் பதற்றம்





வாஷிங்டன், ஜன.21-
கிரீன்லாந்தை வாங்கும் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் கெடு விதித்துள்ள நிலையில், அங்கு ராணுவ விமானம் அனுப்பப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப், டென்மார்க் நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள கிரீன்லாந்து பகுதியை விலைக்கு வாங்க நீண்ட நாட்களாக தீவிர முயற்சி செய்து வருகிறார். சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதிக்கத்தை தடுக்க இந்த நடவடிக்கை அவசியம் என்று அவர் கூறி வருகிறார். ஆனால், இதற்கு டென்மார்க் அரசு தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகிறது.

இதனால் ஆத்திரமடைந்த டிரம்ப், 'கிரீன்லாந்தை விற்காவிட்டால் டென்மார்க் மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும்' என்று பகிரங்கமாக மிரட்டல் விடுத்தார். வரும் 2026ம் ஆண்டு பிப்ரவரி 1ம் தேதி முதல் 10 சதவீதமும், ஜூன் 1ம் தேதி முதல் 25 சதவீதமும் வரி உயர்த்தப்படும் என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், கிரீன்லாந்தில் உள்ள பிடுஃபிக் விண்வெளி தளத்திற்கு வட அமெரிக்க விண்வெளி பாதுகாப்புப் படைக்கு (நோராட்) சொந்தமான விமானத்தை அமெரிக்கா தற்போது அனுப்பியுள்ளது. இது ஐரோப்பிய நாடுகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து நோராட் அமைப்பு வெளியிட்ட பதிவில், 'நீண்ட நாட்களாக திட்டமிடப்பட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த விமானம் அங்கு அனுப்பப்பட்டுள்ளது'

என்றும், 'டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து அரசுகளின் முழு ஒப்புதலுடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்றும் விளக்கம் அளித்துள்ளது. அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கையாக இது இருந்தாலும், டிரம்ப் விதித்துள்ள கெடு முடிவடைய உள்ள நிலையில், அங்கு அமெரிக்க விமானம் தரையிறங்கியுள்ளது சர்வதேச அரசியலில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.



# தனியாரிடம் மின் விநியோகம் ஒன்றிய அரசின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு

டெல்லி, ஜன.21-
மின் விநியோகத்தை தனியர்களுக்கு வகை செய்யும் மின்சார சட்டத்திருத்த மசோதாவை பார்ச்சட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள மின் விநியோகத்தை தனியாருக்கு அளிக்கும் வகையில் சட்டத் திருத்த மசோதாவை ஒன்றிய அரசு தயாரித்துள்ளது. மின் விநியோகத்தை தனியார் நிறுவனங்களுக்கு அளித்தால் மாநில மின்வாரியங்களின் அதிகாரமும், வருவாயும் பாதிக்கப்படும் என்பதால், இந்த சட்டத் திருத்தத்திற்கு மாநில அரசுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மேலும் விவசாயம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான இலவச மின்சாரம், மானியங்கள் போன்றவை தனியார்மயமாக்கலால் பாதிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாற்றியுள்ளனர். அத்துடன் மின் விநியோக உரிமையை பெரும் தனியார் நிறுவனங்கள் லாப நோக்கத்துடன் செயல்பட்டு, நுகர்வோரின் நலன்களைப் புறக்கணிக்கும் என்ற விமர்சனத்தையும் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளனர். இந்த சட்டத் திருத்த மசோதாவை கடந்த குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டது. ஆனால் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டங்கள் காரணமாக மசோதா தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் புதிய டைடல் பூங்காக்கள்



சென்னை, ஜன.21-
தமிழ்நாட்டில் மேலும் 14 மாவட்டங்களில் டைடல் பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் வர உள்ளன என்று ஆளுநர் தெரிவித்தார். சட்டப் பேரவையில் ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று உரையாற்றியபோது கூறியதாவது: தொழில் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.12.16 லட்சம் கோடிக்கும் மேலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, மாநிலம் முழுவதும் தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இதுவரையில் 1176 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை சுமார் 36 லட்சம். 2025ம் ஆண்டில் மட்டும் 14.65 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் மின்னணுவியல் பொருட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தேசிய அளவில் மின்னணுவியல் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 41.2 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சியால் கடந்த 2000ம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட டைடல் பூங்கா, தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழ்நாட்டுக்கான உயரிய இடத்தை உறுதி செய்தது.

அதே வழியில் இந்த அரசும் திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் ஒரு டைடல் பூங்காவையும், தஞ்சாவூர், சேலம், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், திருப்பூர் ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும் நிறுவியுள்ளது. மேலும் மதுரை, திருச்சி, ஒசூர், காரைக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை கரூர், உதக மண்டலம், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய டைடல் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட உள்ளன.

இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் இந்த தொழில் பரவி நம் மாநிலம் சமச்சீரான வளர்ச்சியை எட்டும் நிலை உருவாகியுள்ளது. மேலும், சென்னையில் ரூ.83 கோடி மதிப்பில் நிதி நுட்ப மையம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் 18 புதிய துறைசார் கொள்கைகளை இந்த அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் சுமார் 40 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவை மாநிலத்தின் மொத்த தொழில் சாலை உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை என்னும் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் மூலம் குறு, சிறு நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாடு, தொழில் பயிற் முகாம்கள் என பல முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 36 கலை, அறிவியல் கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது

## 10லட்சம் மாணவர்களுக்கு லேப் டாப்



சென்னை, ஜன.21-

அரசு பள்ளி மாணவர்களுக்கு இளநிலை தொழில் கல்விப் படிப்புகளில் 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அளிக்கும் திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் கல்வி, விடுதி மற்றும் போக்குவரத்து ஆகியவற்றுக்கான கட்டணத்தையும் அரசே ஏற்றுக் கொள்கிறேது. இந்த முன்னோடி திட்டத்துக்கு கடந்த 5 ஆண்டுகளில் 36,419 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.703 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் கீழ் இந்திய அளவில் உள்ள முதல் 100 உயர் கல்வி நிறுவனங்களின் 17 நிறுவனங்கள் அமையப்பெற்று தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தை பெற்று வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.909 மதிப்பீட்டில் அரசு பொறியியல் கலை அறிவியல் மற்றும் பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்டவை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்த அரசின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் நமது மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு உட்பட தொழில் நுட்ப துறையில் அரிய சாதனைகளை படைத்திட தமிழகத்தில் உள்ள கலை அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் 10 லட்சம் மாணவர்களுக்கு இந்த ஆண்டில் ரூ.2172 கோடி மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை தொடர்ந்து ஊக்குவிப்பதன் மூலம் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'மகளிர் விடியல் பயணம்' திட்டத்தால் மகளிரின் பொருளாதார சுமையில் மாதம் ரூ.888 வரை சேமிப்பு





சென்னை, ஜன.21-

ஆண்களுக்கு நிகரான உரிமையை பெண்களும் பெற வேண்டும் என்றால், அதற்கு கல்வியறிவு அடிப்படை தேவை என்றும், ஆண்களை போலவே பெண்களுக்கும் பொருளாதார சுதந்திரம் அவசியம் என்றும் வலியுறுத்தியவர் தந்தை பெரியார். பெண்களுக்கு சொத்துரிமை, அரசு பணிகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீடு, காவல்துறையில் பெண்கள் நியமனம், மகளிர் சுய உதவிக்குழு இயக்கம் என பல்வேறு முன்னெடுப்புகள் மூலம், மகளிர் வாழ்வில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியவர் கலைஞர்.

அவரது கொள்கை பாதையில் நடைபோடும் முதல்வர் தலைமையிலான இந்த அரசு, மகளிர் மேம்பாட்டுக்காக அளப்பரிய பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. பதவியேற்ற நாளன்றே முதல்வர் கையெழுத்திட்ட மகத்தான திட்டம் தான் 'மகளிர் விடியல் பயணம்' மகளிரின் பொருளாதார சுமையை குறைத்திடும் வகையில், கட்டணமில்லா பேருந்து போக்குவரத்துக்கு வழிவகுத்த அந்த ஒரு கையெழுத்தால், ஒரு பெண் சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.888 வரை சேமிப்பதாக மாநில திட்டக்குழு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்திடவும், அவர்களின் உரிமையை நிலைநாட்டும் உயரிய நோக்கத்துடனும் அறிமுகப்படுத்தப்பட்ட உயரிய திட்டம் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' இதன் மூலம் ஒரு கோடியே முப்பது லட்சம் பெண்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.1000 உரிமை தொகையாக பெறுகின்றனர். மகளிரின் சமூக பங்களிப்பினை அங்கீகரித்து அவர்களின் அவசியத் தேவைகளை நிறைவு செய்திட உதவும் இத்திட்டம், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்காக இதுவரை ரூ.33,464 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னீர்குப்பத்தில் நாளை மாலை திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக ஆலோசனை கூட்டம்

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அழைப்பு



திருவள்ளூர், ஜன.21-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக ஆலோசனை கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 5 மணியளவில் சென்னீர்குப்பம் இ.பி.ஆபிஸ் எதிரில் உள்ள கஸ்தூரி மஹாலில் நடக்கிறது. மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமை தாங்குகிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன் எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் முன்னிலை வகிக்கின்றனர். செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்று பேசுகிறார்.

'இந்த கூட்டத்தில் திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படும் பொருள் குறித்தும் வரும் 25ம்தேதி மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள் நடத்துவது குறித்தும் மார்ச் 1ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை கொண்டாடுவது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

எனவே, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

# வாக்குச்சீட்டு முறையில் பெங்களூரு மாநகராட்சி தேர்தல்: கர்நாடக தேர்தல் ஆணையம் அறிவிப்பு



பெங்களூரு, ஜன.21-

பெங்களூரு மாநகராட்சித் தேர்தல் மின்னணு இயந்திரங்களுக்குப் பதிலாக, மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் நடத்தப்படும் என கர்நாடக மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பெங்களூரு மாநகராட்சித் தேர்தலை வருகிற ஜூன் 30ம் தேதிக்குள் நடத்த வேண்டும் என உச்ச நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. இதையடுத்து மாநகராட்சி தேர்தல் பணிகளை ஆளும் காங்கிரஸ், எதிர்க்கட்சியான பாஜக, முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மஜத ஆகிய பிரதான கட்சிகள் முடுக்கிவிட்டுள்ளன.

இந்நிலையில், கர்நாடக மாநில தேர்தல் ஆணையர் ஜி.எஸ். சங்கரேஷி திங்கள்கிழமை பெங்களூருவில் செய்தியாளர்களிடம் கூறியது: 'கிரேட்டர் பெங்களூரு' அமைப்பின் கீழ் இயங்கும் 5 மாநகராட்சிகளுக்கும் வருகிற மே 25ம் தேதிக்குப் பிறகு தேர்தல் நடத்தப்படும்

கடந்த ஆண்டு கர்நாடக அரசு உள்ளாட்சி தேர்தல்கள் வாக்கு சீட்டு முறையில் தேர்தல் நடத்தப்படும் என அறிவித்தது. அதன்படி, பெங்களூரு மாநகராட்சி தேர்தல் இந்த முறை மின்னணு வாக்கு இயந்திரங்களுக்கு பதிலாக வாக்குச்சீட்டு முறையிலே நடத்தப்படும்.

மின்னணு வாக்கு இயந்திரம் மூலமாக தேர்தல் நடத்த வேண்டும் என சட்டம் எதுவும் இல்லை. இது தொடர்பாக உச்ச நீதிமன்றமும் எவ்வித ஆணையும் பிறப்பிக்கவில்லை.

எனவே 30 ஆண்டுகளுக்கு பிறகு வாக்கு சீட்டு முறைப்படி தேர்தல் நடத்த இருக்கிறோம். வாக்குச்சீட்டு முறை என்பது மிக பழமையானது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இன்னும் வாக்குச்சீட்டு முறை பயன்பாட்டில் இருக்கிறது. இந்த முறையால் எவ்வித சிரமும் இல்லை.

கிரேட்டர் பெங்களூரு அமைப்பில் உள்ள 5 மாநகராட்சிகளிலும் மொத்தமாக 369 வார்டுகள் உள்ளன. இதில் மொத்தம் 88 லட்சத்து 91 ஆயிரத்து 411 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆண்கள் 45 லட்சத்து 69 ஆயிரத்து 193 பேர், பெண்கள் 45 லட்சத்து 20 ஆயிரத்து 583 பேர் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 1,635 பேர் ஆவர். தேர்தலை சீராக நடத்த மொத்தம் 8,044 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன" என்று அவர் தெரிவித்தார்.



# ஸ்பெயினில் அதிவேக ரயில் தடம்புரண்டு 39 பேர் உயிரிழப்பு

பார்சிலோனா, ஜன.21-

ஸ்பெயின் நாட்டின் மலாகாவில் இருந்து மாட்ரிட் நகருக்கு அதிவேக ரயில் நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்தது. அதில் 300 பயணிகள் இருந்தனர்.

அதே நேரத்தில் மாட்ரிட்டில் இருந்து ஹியூல்வா நகருக்கு மற்றொரு ரயில் வந்து கொண்டிருந்தது. இரவு 7.45 மணிக்கு கர்டோபா பகுதியில் மாட்ரிட் சென்று கொண்டிருந்த ரயிலின் கடைசி பெட்டிகள் திடீரென தடம் புரண்டு எதிரில் வந்த ரயில் மீது மோதியது. இந்த விபத்தில் எதிரில் 200 பயணிகளுடன் வந்த ரயிலின் பெட்டிகளும் தடம் புரண்டன.

இதில் 39 பயணிகள் உயிரிழந்தனர். 73 பயணிகள் படுகாயம் அடைந்துள்ளனர். ஸ்பெயின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆஸ்கர் புயன்டி கூறும்போது,"படுகாயம் அடைந்தவர்களில் பலருடைய உடல்நிலைக் கவலைக்கு இடமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்ற அஞ்சப்படுகிறது" என்றார்.

# சீனாவில் பிறப்பு விகிதம் 17% சரிவு



பேங்காக், ஜன.21-

சீனாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 140.4 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டை விட 30 லட்சம் குறைவாகும். 2025 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை வெறும் 79.2 லட்சமாக மட்டுமே பதிவாகியுள்ளது.

இது முந்தைய 2024 ம் ஆண்டை விட 16.2 லட்சம் அதாவது 17 சதவீதம் குறைவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து 2024இல் பிறப்பு விகிதத்தில் தென்பட்ட சிறிய முன்னேற்றம் ஒரு நிலையான மாற்றம் அல்ல என்பது தெரியவந்துள்ளது. சீனா பல தசாப்தங்களாக "ஒரே குழந்தை" கொள்கையை பின்பற்றியது. இப்போது மக்கள் தொகை சரிவைத் தடுக்க, 2015ல் 2 குழந்தைகளுக்கும், 2021ல் மூன்று குழந்தைகளுக்கும் சீனா அனுமதி அளித்தது. குழந்தை பெறுவோருக்கு ஊக்கத் தொகையும் அளித்தது. எனினும் குழந்தை பிறப்பு சரிந்துள்ளது.

# பரமக்குடி: கழிப்பறையில் செல்போன் மூலம் பெண் காவலர்களை வீடியோ எடுத்த சிறப்பு எஸ்.ஐ சஸ்பெண்ட்

ராமநாதபுரம், ஜன.21-

பரமக்குடியில் பாதுகாப்பு பணிக்கு வந்த பெண் காவலர்களை கழிப்பறையில் செல்போன் கேமரா மூலம் வீடியோ எடுத்த எஸ்எஸ்ஐயை ராமநாதபுரம் எஸ்பி பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் ஜன.17 அன்று தியாகி இமானுவேல் சேகரன் மணிமண்டபத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். இதையொட்டி பல்வேறு மாவட்டங்களில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

செல்போன் கேமரா: அப்போது பரமக்குடி நகர் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துப்பாண்டி, மணி நகரில் உள்ள புறக்காவல் நிலையச் சோதனைச்சாவடி பணியில் ஈடுபட்டிருந்தார்.

அங்கு பெண் காவலர்களும் பணியில் இருந்தனர். அந்தச் சோதனைச்சாவடி கழிப்பறைக்கு தஞ்சாவூரைச் சேர்ந்த பெண் காவலர் ஒருவர் சென்றபோது, அங்கு செல்போன் கேமரா மூலம் வீடியோ பதிவாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து அவர் காவல் துறை உயர் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தார். விசாரணையில், செல்போனை வைத்து வீடியோ எடுத்தது எஸ்எஸ்ஐ முத்துப்பாண்டி எனத் தெரியவந்தது.

பெண் காவலர் புகாரின் பேரில் முத்துப்பாண்டி மீது பரமக்குடி அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து நேற்று முன்தினம் அவரை கைது செய்து ராமநாதபுரம் மாவட்ட சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் எஸ்எஸ்ஐ முத்துப்பாண்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் பணியிடை நீக்கம் செய்து நேற்று உத்தரவிட்டார்.





# சாத்தூர் அருகே மேம்பால தடுப்பு மீது வேன் மோதிய விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆக உயர்வு

விருதுநகர், ஜன.21-

சாத்தூர் அருகே மேம்பால தடுப்பு மீது வேன் மோதிய விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது. மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கவிதா என்பவர் உயிரிழந்தார். நெல்லையில் இருந்து பொள்ளாச்சிக்கு 11 பேருடன் சென்ற சரக்கு வேன் ஆர்.ஆர். நகர் மேம்பால தடுப்பில் மோதி விபத்து ஏற்பட்டது.

# சபரிமலை தங்க திருட்டு வழக்கு: கேரளா, தமிழகம், கர்நாடகா உள்பட 21 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை



திருவனந்தபுரம்: , ஜன,21-

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் திருடப்பட்டதன் மூலம் கிடைத்த சட்டவிரோத வருமானத்தை பணமோசடி செய்திருக்கலாம் என்ற அடிப்படையில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மொத்தம் 21 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் மாயமானது தொடர்பாக கேரள உயர் நீதிமன்ற உத்தரவுப்படி சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வரும் நிலையில், அக்குழு பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் அமலாக்கத் துறை தனது விசாரணையை தொடங்கி உள்ளது.

திருவனந்தபுரத்தில் உள்ள திருவிதாங்கூர் தேவசம் போர்டின் தலைமையகம், ஆரன்முறையில் உள்ள திருவிதாங்கூர் தேவசம் போர்டின் (ஜிஞிபி) முன்னாள் தலைவர் மற்றும் சிபிஎம் கட்சியின் மூத்த தலைவர் ஏ. பத்மகுமாரின் இல்லம், இந்த வழக்கின் பிரதான குற்றச்சாட்டுக்கு உள்ளான உன்னிகிருஷ்ணன் போற்றியின் புலிமத்துவில் உள்ள இல்லம், ஜிஞிபி முன்னாள் ஆணையாளர் மற்றும் முன்னாள் தலைவர் என். வாசுவின் திருவனந்தபுரம் இல்லம், ஜிஞிபியின் முன்னாள் நிர்வாக அதிகாரி முராரி பாபுவின் கோட்டயம் இல்லம், சென்னை அம்பத்தூரில் உள்ள ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் என்ற உலோகப் பட்டறையின் உரிமையாளர் பங்கஜ் பண்டாரியின் இல்லம் மற்றும் அலுவலகம், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நகைக்கடைக்காரரான கர்நாடகாவின் பெல்லாரியைச் சேர்ந்த கோவர்த்தனுக்குச் சொந்தமான வளாகம் ஆகியவற்றில் ஒரே நேரத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனையை தொடங்கி உள்ளனர்.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக விசாரணை தொடங்க விசாரணை ஆணையர் மற்றும் சிறப்பு நீதிபதி, அமலாக்கத் துறைக்கு கடந்த டிசம்பரில் அங்கீகாரம் அளித்ததை அடுத்து இந்த சோதனை நடைபெற்றுள்ளது.

முன்னதாக, உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழுவின் தற்போதைய விசாரணையை அமலாக்கத் துறையின் விசாரணை பாதிக்கும் என மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்தது. எனினும், மாநில அரசின் இந்த வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. மேலும், குற்றம் தொடர்பான ஆவணங்களை அமலாக்கத் துறையிடம் ஒப்படைக்க அரசு வழக்கறிஞருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஐயப்பன் கோயிலின் துவாரபாலகர் சிலைகள் மற்றும் கோயில் (கருவறை) கதவு சட்டங்களில் இருந்து தங்கம் காணாமல் போனது குறித்து சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த இரண்டு வழக்குகளிலும் இது வரை முதன்மை குற்றவாளி உண்ணிகிருஷ்ணன் போற்றி மற்றும் திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டின் முன்னாள் தலைவர்கள் இருவர் உட்பட 12 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று, கணிணி அறிவியல் தொழில்நுட்பப் பிரிவில் பயிலும் கல்லூரி மாணவன் குருராஜ்க்கு ரூ.50.000/ கல்வி உதவித்தொகைக்கான காசோலையினை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்.



# திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை கவாத்து மைதானத்தில் ஆயுதப்படை காவலர்களின் அணிவகுப்பு மரியாதை

திருநெல்வேலி, ஜன.21-

திருநெல்வேலி காவல் சரகத்திற்கு ஆய்வு கூட்டம் நடத்த வருகை தந்த தென்மண்டல காவல்துறை தலைவர் விஜயேந்திர பிதாரி இ.கா.ப திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை கவாத்து மைதானத்தில், ஆயுதப்படை காவலர்களின் அணிவகுப்பு மரியாதை கவாத்தினை ஏற்றுக்கொண்டு, ஆயுதப்படை காவல் அலுவலர்கள் மற்றும் ஆளினர்களுக்கு பணியின் போது காவலர்கள் நடந்து கொள்ளும் விதம் குறித்தும், காவல்துறையின் மாண்பு குறித்தும் அறிவுரைகள் வழங்கி காவலர்களிடம் குறை சம்பந்தமான மனுக்களை பெற்றுக் கொண்டார்.

மேலும், முதல் முறையாக திருநெல்வேலி மாவட்ட ஊர்க்காவல் படையில் போக்குவரத்து அலுவல் பணி புரிவதற்காக 16 ஊர்க்காவல் படையினருக்கு போக்குவரத்து பணி சம்பந்தமான உபகரணங்கள் வழங்கி ஊர்காவல் படையினர் போக்குவரத்து அலுவல் புரியும் முறையினை முதன்முறையாக தொடங்கி வைத்தார்.

மேற்படி ஊர் காவல் படையினர் களக்காடு, மூலக்கரைப்பட்டி, அம்பாசமுத்திரம் மற்றும் திசையன்விளை ஆகிய காவல் நிலையங்களில் போக்குவரத்துக் காவல் பணிபுரிய நியமிக்கப்பட்டனர். மேற்படி நிகழ்வில், திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் றி. சரவணன் இ.கா.ப, திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் ழி.மணிவண்ணன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர். ஷ்ஷி. பிரசண்ண குமார், இ .கா .ப ஆகியோர் உடன் இருந்தனர்.



# ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாட்டம்

தென்காசி : ஜன 21-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் தமிழர் திருநாளான பொங்கல் விழா பாரம்பரிய முறையில் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் தலைவர் ஜேசஸ் ராஜா தலைமை தாங்கி சிறப்பித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் விழாவினை தொடங்கி வைத்து பொங்கல் விழாவின் முக்கியத்துவம் குறித்து வாழ்த்துரை வழங்கினார்.

விழாவின் சிறப்பு அம்சமாக மாணவ மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பொங்கல் வைத்து தமிழர்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் மாணவ மாணவியர் பாரம்பரிய உடைகள் அணிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டது விழாவிற்கு கூடுதல் சிறப்பை அளித்தது.

தொடர்ந்து மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசளிப்பு நிகழ்வில் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டு வெற்றியாளர்களை பாராட்டினர். இந்த பொங்கல் விழாவின் மூலம் மாணவர்கள் இடையே தமிழர் பண்பாடு பாரம்பரியம் மற்றும் ஒற்றுமை உணர்வை மேம்படுத்துவதாக கல்லூரி நிர்வாகம் பெருமையுடன் தெரிவித்தது. விழாவின் நிறைவில் அனைவருக்கும் கரும்பு மற்றும் இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டது.



■ திருப்பூர் பல்லடம் வடக்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ. மான கரைப்புதூர் ஏ.நடராஜன் தலைமையில் விளையாட்டு பல்வேறு போட்டி மற்றும் பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற தலைவர் முருகசாமி, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மயூரி நடராஜ், ஒன்றிய துணை செயலாளர் பரமசிவம், திருப்பூர் ஒன்றிய குழு முன்னாள் கவுன்சிலர் கல்பனா வேலுசாமி, ஊராட்சி செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஆனந்தன், மங்கலம் முத்துசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புளியங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்

புளியங்குடி ஜன.21-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அரசு ஆண்களின் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விளையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியான பள்ளி வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் மாரியப்பன் தலைமை வகித்தார். புளியங்குடி நகர்மன்ற தலைவி விஜயாசௌந்தர பாண்டியன் நகராட்சி ஆணையாளர் நாகராஜ், நகர்மன்ற உறுப்பினர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.





வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் பள்ளி மாணவருமான சதன்திருமலை குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நிலையில், பள்ளியின் பழமையான கட்டிடத்தின் சிதிலமடைந்துள்ள நிலையில், இதன் பழமை மாறாமல் புதுப்பிக்க பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை நேரில் சந்தித்து கோரிக்கை வைக்க உள்ளதாகவும் பேசினார்.

தொடர்ந்து 76 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இதில் உதவி தலைமைசிரியர் ஜெயக்குமாரி ஆசிரியர்கள் பீட்டர்(எ)டேனியல், பரமசிவன், மணிகண்டன், தாஜீன்னிஸா, வேல்ராஜ், கண்ணன், சேமு. முகைதீன்பார்த்து, ரெபேக்காசுமினாராணி, தனசேகரன், மூகாம்பிகா, செல்வி , சீமோன், பந்தளராஜா, சாமுவேல், நிர்மலா லூடஸ்செரின், அந்தோணி செல்லின் உட்பட பலர் கலந்து. கொண்டனர்.

# திண்டுக்கல் எம்.பி சச்சிதானந்தம் கட்சி நிர்வாகியின் தாயாரை காப்பாற்ற இரத்ததானம்

திண்டுக்கல், ஜன 21-

திண்டுக்கல் எம்.பி;. ஆர்.சச்சிதானந்தம் தொடர்ந்து 33வது முறை ரத்த தானம் வழங்கி சாதனை படைத்தார். கட்சி நிர்வாகியின் தாயாரை காப்பாற்ற இரத்ததானம் வழங்கியதை சமூக ஆர்வலர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் மனதார பாராட்டினர்கள். திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காமாட்சிபுரம் ஊராட்சி, கட்டசின்னாம்பட்டியைச் சேர்ந்தவர். தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக



கிராமப்புற விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்து வருபவர். இது தவிர பலமுறை இரத்த தானம் செய்து பல உயிர்களை காப்பாற்றியுள்ளார்.

தொடர்ந்து 33 வது முறையாக எம்.பி. ஆர்.சச்சிதானந்தம் இரத்த தானம் வழங்கி யிருப்பதை கேள்விப்பட்ட மருத்துவர்கள் அவரைப் பாராட்டினார்கள். இதுதவிர சமூக ஆர்வலர்களும், கட்சி நிர்வாகிகளும் எம்.பி. சச்சிதானந்தம் அவர்களின் மனித நேயத்தை பாராட்டினர்கள்.

# மாநில அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகத்தை மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன் குமார் ஆய்வு

மதுரை மாவட்டம், ஜன.21-

மதுரை வடக்கு வட்டம், கே.கே நகரில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை கீழ் செயல்பட்டு வரும் மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகத்தை பார்வை யிட்டார்.



அக்மார்க் திட்டத்தின்கீழ் பதின்மூன்று இலட்சம் குவிண்டால் அளவிலான உணவுப்பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரமான கலப்படமற்ற உணவுப்பொருட்களுக்கு அக்மார்க் தரச்சான்றிதழ் தரப்படுகிறது.

இந்த ஆய்வுக் கூடத்தில் கடந்த 4 ஆண்டுகளில் அதிகபட்சமாக அரிசி 9,22,528 குவிண்டாலும், கடலை மாவு 2,46,545 குவிண்டாலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் தேன்,நெய், நல்லெண்ணெய் சீகைக்காய் தூள், பயறு, நறுமணப்பொருட்கள், கோதுமை மாவு, கட்டி பெருங்காயம், புளி, வறுத்த பொரிகடலை போன்ற உணவுப்பொருட்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.



■ ஈரோடு மாவட் ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி அவர்கள் சத்தியமங்கலம் ராஜன் நகரில் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ் குடியிருப்புகளுக்கு தன்னார்வலர்கள் மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்பப் பெறும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்

# ஜனநாயகன் பட வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

சென்னை, ஜன.21-

ஜனநாயகன் சென்சார் சான்றிதழ் வழக்கில் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளிவைத்தது. அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில் தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது. ஜனநாயகன் படத்துக்கு தணிக்கைச் சான்று கோரி தனி நீதிபதி முன் தயாரிப்பு நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த தனி நீதிபதி, ஜனநாயகன் படத்துக்கு யு/ஏ சான்றிதழ் வழங்க உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் சார்பில் தலைமை நீதிபதி அமர்வில் வழக்கு தொடரப்பட்டது



# தெளிவுபடுத்துமா?.. கொடைக்கானல் வனத்துறை

திண்டுக்கல், ஜன.21-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் ஒரு சர்வதேச சுற்றுலா தலமாகும். அதிகப்படியான சுற்றுலா தலங்கள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் ஒவ்வொரு சுற்றுலா தலத்திலும் நேரடியாக பணம் செலுத்தி நுழைவு சீட்டு வாங்கும் நடைமுறையை மாற்றி கடந்த சில வாரங்களுக்கு முன்பாக ஆன்லைன் நுழைவு சீட்டு முறையைஅறிமுகப்படுத்தியது கொடைக்கானல் வனத்துறை. இதில் அதிகப்படியான சிக்கல் இருந்த காரணத்தினால் பழைய நுழைவு சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்த அனைத்து பொதுமக்களும் சுற்றுலா பயணிகளும் கோரிக்கை வைத்தனர். அதனால் வாகன நெரிசல் அதிகம் ஏற்படும் சூழலும் ஏற்படுகிறது. அதையும் தாண்டி எந்த ஒரு சுற்றுலா தளத்திலும் சரியான முறையில் கழிப்பறை வசதி இல்லாதது, சுற்றுலா பயணிகளை தாக்குவது என்று வரம்பை மீறிய செயலில் ஈடுபட்ட வனத்துறையில் புதிதாக வனக்குழு விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது வனக்குழு யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது? வனக்குழுவில் உள்ள கடைகளின் வருமானம் எங்கு செல்கிறது? இந்த வனக்குழுவின் அடிப்படை நோக்கம் என்ன? என்ற பல கேள்விகள் கொடைக்கானல் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களின் கேள்வியாக உள்ளது. இந்த விவகாரங்களை தெளிவுபடுத்துமா கொடைக்கானல் வனத்துறை



# எண்ணூர் அமோனியா உர நிறுவனத்திற்கு சீல் வைக்க கோரிய வழக்கு; ஒன்றிய, தமிழக அரசுகளுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.21-

சென்னை எண்ணூரில் உள்ள கோரமண்டல் உர நிறுவனத்துக்கு துறைமுகத்திலிருந்து, திரவ அம்மோனியாவை கொண்டு செல்ல, கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள குழாய் 2023ம் ஆண்டு டிசம்பர் 26ம் தேதி சேதமடைந்தது. இதனால் அமோனியா கசிவு ஏற்பட்டு 52 க்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு 5 கோடியே 92 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க அரசு உத்தரவிட்டது. இந்த நிலையில், போபால் விஷவாயு துயர சம்பவத்துக்கு இணையாக விஷ வாயு கசிவு ஏற்படுத்திய, அமோனியா உர நிறுவனத்தை சீல் வைக்க உத்தரவிடக் கோரி, திருவொற்றியூர் முன்னாள் எம்எல்ஏ கே. குப்பன் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், நிறுவனத்தில், அமோனியா பரிமாற்றம், சேமிப்பு மற்றும் தொடர்புடைய அபாயகரமான செயல்பாடுகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட வேண்டும். கடந்த 2023ம் ஆண்டு அம்மோனியா வாயு கசிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முழு இழப்பீடு வழங்குமாறு சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, மனுவுக்கு பதிலளிக்குமாறு ஒன்றிய அரசுக்கும், தமிழக அரசுக்கும் உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000